**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.10**

**தேதி: 08.08.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **சாகுல் ஹமீது** | **ஜாதி:** | **லப்பை** |
| **தந்தை பெயர் :** | **பாட்ஷா சாவிதிப்** | **தொழில்:** | |
| **கிராமம்:** | **சிவகங்கை** | **சமயம்:** | **முஸ்லீம்** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **80** |

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கையில் காமராஜர் சாலையில் வசித்து வருகிறேன். நான் சிவகங்கை மன்னர் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் என் வீட்டின் பின்புறமுள்ள காம்பவுண்ட் வீட்டை வாடகைக்கு விட்டு இருந்தேன். பஞ்சவர்ணத்தின் கணவர் அதில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தார். 5, 6 மாதம் வாடகை கொடுக்காததால் நான் வீட்டை காலி செய்யும் படி சொல்லிவிட்டேன். பஞ்வர்ணத்தின் கணவர் கொலை செய்துவிட்டதாக போலீசார் என்னிடம் சொன்னார்கள். போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:**

பெத்தலீஸ் என்பவர்அடிக்கடி நான் வாடகைக்கு விட்ட வீட்டிற்கு வந்து போனதாகவும் அதை செந்தில்குமார் கண்டுகொள்ளவில்லை என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 19.12.2013ம் தேதிக்கு சில நாட்களுக்கு முன்பாக பெத்தலீஸ் வாத்தியார் அந்த வீட்டிற்கு

வருவதில்லை என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.11**

**தேதி: 08.08.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **மரியம்பீவி** | **ஜாதி:** | **லப்பை** |
| **தந்தை பெயர் :** | **காதர் மைதீன்** | **தொழில்:** | **கூலி** |
| **கிராமம்:** | **சிவகங்கை** | **சமயம்:** | **முஸ்லீம்** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **50** |

**முதல் விசாரணை:**

நான் 2012வாக்கில் சாட்சி சாகுல்ஹமீது வீட்டில் குடியிருந்தேன். அந்த வீட்டிற்கு அருகே வசந்தி என்பவரும் குடியிருந்தார். அருகில் அப்போது வேறு யார் குடியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் குடியிருந்த வீட்டிற்கு எதிரே 1ம் எதிரி செந்தில்குமாரும் அவரது மனைவி பஞ்சவர்ணமும் குடியிருந்ததாகவும் அவரது வீட்டிற்கு திருமாஞ்சோலையில் ஆசிரியராக பணியாற்றி பெத்தலீஸ் என்பவர் வந்து தங்கி, சென்றதாகவும் செந்தில்குமார் கண்டுகொள்ளவில்லை என்றும் செந்தில்குமாரும், பெத்தலீசும் செந்தில்வீட்டில் மது அருந்தி வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் எதிரி கிராம நிர்வாக

அதிகாரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.12**

**தேதி: 08.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வசந்தி | ஜாதி: | ஆண்டிபண்டாரம் |
| தந்தை பெயர் : | முனியாண்டி | தொழில்: | கூலி |
| கிராமம்: | சிவகங்கை | சமயம்: | இந்து |
| தாலுகா: | சிவகங்கை | வயது: | 50 |

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கை வீரகாளியம்மன் கோவில் அருகே குடியிருந்து வந்தேன். செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் சாகுல்ஹமீது வீட்டில் குடியிருந்து வந்தததாகவும் 1ம் எதிரியும் அவரது மனைவியும் அருகே குடியிருந்ததாகவும் 19.2.2013ம் தேதிக்கு சில நாள் முன் வரை பெத்தலீஸ் வாத்தியார் 1ம் எதிரி செந்தில்குமார் வீட்டிற்கு வந்து சென்றதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கு

பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.